


**18. 08. 2025**

## தலைப்பு செய்திகள்

**1.** பீஹார் வாக்காளர் பட்டியல் விவகார பிரச்சனையில் எதிர்கட்சிகளின் அமளி காரணமாக நாடாளுமன்றத்தின் இரு அவைகளும் பிற்பகல் 2 மணிவரை இன்று ஒத்திவைக்கப்பட்டன.

**2.** சர்வதேச விண்வெளி பயணத்தை வெற்றிகரமாக நிறைவுசெய்த குரூப் கேப்டன் சுபான்ஷு சுக்லாவிற்கு பாராட்டு தெரிவிக்கும் சிறப்பு விவாதம் மக்களவையில் இன்று நடைபெற உள்ளது.

**3.** மின் தூக்கி உற்பத்தியில் முன்னோடி மாநிலமாக தமிழகம் உருவாகி வருவதாக முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் தெரிவித்தார்.

**4.** குடியரசு துணைத்தலைவர் வேட்பாளர் திரு.சி.பி.ராதாகிருஷ்ணனுக்கு தமிழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவு அளிக்க அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு.எடப்பாடி கே.பழனிச்சாமி கேட்டுக்கொண்டார்.

**5.** மேட்டூர் அணையிலிருந்து பெருமளவு உபரி நீர் திறக்க வாய்ப்புள்ளதால் 11 கரையோர மாவட்டங்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## இனி விரிவான செய்திகள்

**********

### நாடாளுமன்றம்

பீஹார் வாக்காளர் பட்டியல் விவகாரம் உள்ளிட்ட பல்வேறு பிரச்சனைகளில் எதிர்கட்சிகள் இன்றும் அமளியில் ஈடுபட்டதால் நாடாளுமன்ற இரு அவைகளும் பிற்பகல் 2 மணிவரை இன்று ஒத்திவைக்கப்பட்டன.

மக்களவை இன்றுகாலை கூடியதும் இப்பிரச்சனையை எழுப்பி எதிர்கட்சி உறுப்பினர்கள் ஆர்பாட்டத்தில் ஈடுபடவே, அவைத்தலைவர் திரு.ஓம்.பிர்லா, அவர்களுக்கு எச்சரிக்கை விடுத்ததோடு, அரசு சொத்துக்களுக்கு சேதம் விளைவிப்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

மக்கள் நலன்கள் சார்ந்த விவாதங்களில் ஈடுபடாமல், அவை நடவடிக்கைகளுக்கு எதிர்கட்சியினர் தொடர்ந்து இடையூறு விளைவிப்பதாக அவர் குறைகூறினார்.

அமைதிகாக்க அவை தலைவர் விடுத்த வேண்டுகோளுக்கு எதிர்கட்சி உறுப்பினர்கள் செவிசாய்க்காமல், தொடர்ந்து அமளியில் ஈடுபட்டதால், மக்களவை முதலில் நண்பகல் வரையிலும் பின்னர் பிற்பகல் வரையிலும் ஒத்திவைக்கப்பட்டது.

மாநிலங்களவையிலும் இதே பிரச்சனை எதிரொலித்ததால் அவை துணைத்தலைவர் திரு.ஹர்வன்ஷ் பிற்பகல் 2 மணிவரை அவையை ஒத்திவைத்தார்.

முன்னதாக மாநிலங்களவை கூடியதும் முன்னாள் உறுப்பினர் இல.கணேசனின் மறைவிற்கு அவையில் அஞ்சலி செலுத்தப்பட்டது.

மணிப்பூர் ஆளுநராகவும் இல.கணேசன் பணியாற்றியதாகவும், தமிழகத்தில் வகுப்புவாத போராட்டங்களின் போது தீவிரமாக செயல்பட்டு அமைதி திரும்ப பங்காற்றியதாகவும் திரு.ஹரிவன்ஷ் எடுத்துரைத்தார்.

**********

### கிரண் ரிஜிஜு

சர்வதேச விண்வெளி நிலையத்தில் தங்கியிருந்து வளர்ச்சி அடைந்த பாரதத்திற்கான விண்வெளி திட்டங்களில் தனி கவனம் செலுத்திய குரூப் கேப்டன் சுபான்ஷு சுக்லாவிற்கு பாராட்டு தெரிவிக்கும் சிறப்பு விவாதம் மக்களவையில் இன்று இடம்பெறுகிறது.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் இதை தெரிவித்த நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு.கிரண் ரிஜிஜு அவரது வரலாற்று சாதனைகளை போற்றும் வகையிலும், இந்தியாவின் உத்வேகம் மிகு விண்வெளி திட்டங்கள் குறித்தும் இதில் விவாதிக்கப்படும் என்று குறிப்பிட்டார்.

ஆபரேசன் சிந்தூர் விவாதத்தில் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் பங்கேற்றதுபோல குரூப் கேப்டன் சுபான்ஷு சுக்லா விவாதத்திலும் பங்கேற்று இந்திய விஞ்ஞானிகளை கவுரவிக்க வேண்டும் என்று அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

**********

**ஜெயந்த் சவுத்ரி – மக்களவை**

பள்ளிகளில் மாணாக்கரின் பாதுகாப்பு விஷயத்தில் எவ்வித சமரசத்திற்கும் இடமில்லை என்று மத்திய கல்வி இணை அமைச்சர் திரு.ஜெயந்த் சவுத்ரி தெரிவித்துள்ளார்.

மக்களவையில் இன்று துணை கேள்விகளுக்கு பதில் அளித்த அவர், இதுதொடர்பான நெறிமுறைகள் மாநிலங்கள், யூனியன் பிரதேசங்கள் மற்றும் பள்ளி வாரியங்களுக்கு அவ்வப்போது தொடர்ந்து அனுப்பப்படுவதாக எடுத்துரைத்தார்.

**********

**சிவ்ராஜ்சிங் சவ்ஹான்**

போலி உரம் பூச்சிக்கொல்லி மருந்துகள் விதைகள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று மத்திய வேளாண் அமைச்சர் திரு.சிவ்ராஜ்சிங் சவ்ஹான் எச்சரித்துள்ளார்.

மத்திய பிரதேச மாநிலத்தில் சோயா பீன் பயறுகள் பாதிப்பை ஆய்வு செய்வதற்காக அம்மாநிலம் சென்ற திரு.சவ்ஹான் இத்தகைய தொழிற்சாலைகளுக்கு எதிராக நாடுதழுவிய பிரச்சாரம் மேற்கொள்ளப்படும் என்று குறிப்பிட்டார்.

**********

**முதலமைச்சர்**

நாட்டில் தயாராகும் 3 மின் தூக்கிகளில் ஒன்று தமிழ்நாட்டில் உற்பத்தியாவதாக முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் தெரிவித்திருக்கிறார்.

சென்னையில் இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் பிற மாநிலங்களை ஒப்பிடுகையில் மின் தூக்கி உற்பத்தி மையத்தில் முன்னோடி மாநிலமாக உருவாவதற்கான பாதையில் தமிழகம் முன்னேறி செல்வதாக எடுத்துரைத்தார்.

மாநில அரசின் பல்வேறு திட்டங்களால் மகளிர் கல்வி அதிகரித்துள்ளதாக கூறிய அவர், இதன்காரணமாக பெண்கள் குறித்த சமூக விழிப்புணர்வும் அதிகரித்துள்ளதாக எடுத்துரைத்தார்.

நகரங்கள் மற்றும் கிராம புறங்களில் காவல்துறையில் பெண்களுக்கு பாதுகாப்பு அளிக்கும் காவலன் செயலி இரவு நேர கண்காணிப்பு ரோந்து திட்டங்கள் நடைமுறையில் இருப்பதை அவர் சுட்டிக்காட்டினார்.

இத்தகைய வலுவான செயல்பாடுகளால் தமிழகம் பிற மாநிலங்களுக்கு சிறந்த எடுத்துக்காட்டாக திகழ்கிறது என்று அவர் கூறினார்.

**********

**உதய நிதி**

சென்னை ராயபுரம் **போஜராஜன் நகரில்** 30 கோடி ரூபாய் மதிப்பில் அமைக்கப்பட்டுள்ள சுரங்கப்பாதையை துணை முதலமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் இன்று திறந்து வைத்தார்.

ஒரு கோடியே 41 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள குழந்தைகள் விளையாட்டுத்திடல், ரவுண்டானா பூங்கா மேம்பாட்டு பணிகள், பொதுமக்களுக்கான ஓய்வுக்கூடம் ஆகியவற்றையும் அவர் திறந்து வைத்தார்.

தொடர்ந்து செம்மொழி பூங்கா சாலையில் நடைபெற்று வரும் பாலப்பணிகளை பார்வையிட்ட அவர் அவற்றை விரைந்து முடிக்க அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

**********

**எடப்பாடி**

தேசிய ஜனநாயக கூட்டணியின் குடியரசு துணைத்தலைவர் வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ள தமிழகத்தை சேர்ந்த திரு.சி.பி.ராதாகிருஷ்ணனுக்கு திமுக மற்றும் அதன் கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவு அளிக்க வேண்டும் என அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு.எடப்பாடி கே.பழனிச்சாமி கேட்டுக்கொண்டுள்ளார்.

திருவண்ணாமலையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், தமிழ்நாட்டை சேர்ந்த ஒருவர் குடியரசு துணை தலைவர் ஆவதற்கு அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஆதரவு அளிக்க வேண்டும் என்றார்.

**********

**பட்டமளிப்பு**

காரைக்குடி அழகப்பா பல்கலைகழகத்தின் 36ஆவது பட்டமளிப்பு விழா இன்று நடைபெற்றது..

பல்கலைகழக வேந்தரும் தமிழக ஆளுநருமான திரு.ஆர்.என்.ரவி மாணாக்கருக்கு பட்டங்களை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் உரையாற்றிய இஸ்ரோ தலைவர் திரு.நாராயணன் பாதுகாப்பு ஆராய்ச்சி மேம்பாட்டு நிறுவனம் உருவாக்கிய அர்ஜூன் பிரங்கி, பிரம்மோஸ் ஏவுகணை, தேஜஸ் போர் விமானங்கள் நம் நாட்டை பாதுகாப்பில் வல்லரசாக மேம்படுத்தியுள்ளதாக பெருமிதம் தெரிவித்தார்.

அணுமின் துறையில் 23 அணுஉலைகள், 8 ஆயிரத்து 180 மெகாவாட் மின் உற்பத்தி செய்வதாகவும், உயர்கல்வி நிறுவனங்கள் நாட்டின் வளர்ச்சியில் முக்கிய பங்காற்றுவதாகவும் எடுத்துரைத்தார்.

இந்தியாவை மேம்பட்ட தேசமாக நிலைநிறுத்த மாணாக்கர் சிறந்த பங்களிப்பு நல்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

பசுமை புரட்சியின் மூலம் உணவு உற்பத்தியில் நம் நாடு தன்னிறைவை எட்டியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

**********

**அமைச்சர்கள்**

தமிழ்நாட்டில் வணிகவரி அலுவலர்களின் நிர்வாக திறனை மேம்படுத்தும் நோக்கத்துடன் வண்டலூர் காவல்துறை பயிற்சியகத்தில், துணை மாநில வரி அலுவலர்களுக்கான சிறப்பு பயிற்சி முகாமை மாநில அமைச்சர்கள் திரு.தா.மோ.அன்பரசன் திரு.மூர்த்தி ஆகியோர் இன்று தொடங்கிவைத்தனர்.

வரும் 30ஆம் தேதிவரை நடைபெறும் இப்பயிற்சி முகாமில் வணிகவரி துறை செயல்பாடுகள் தொடர்பான சட்டங்கள், விதிகள் குறித்த விளக்கங்கள் இடம்பெறும்.

**********

**பாஸ்போர்ட்**

சென்னை அண்ணா பல்கலைகழகத்தில், மண்டல பாஸ்போர்ட் சேவை மையம் சார்பில் நடமாடும் சேவை முகாம் இன்றுகாலை தொடங்கியது.

நாளை மாலை வரை நடைபெறும் இம்முகாமில் பாஸ்போர்ட் தேவைப்படும் மாணாக்கர், தங்கள் பெயரை பதிவு செய்து பயன்பெறலாம்.

**********

**மேட்டூர்**

காவிரி நீர்பிடிப்பு பகுதிகளில் கன மழை பெய்துவரும் நிலையில் கபிணி கிருஷ்ணராஜசாகர் அணைகளிலிருந்து 95 ஆயிரம் கன அடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது.

இதனையடுத்து மேட்டூர் அணை அதன் முழு கொள்ளளவான 120 அடியை விரைவில் எட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேட்டூர் அணை நிரம்பியவுடன் அணைக்கு வரும் உபரி நீர் முழுமையாக காவிரி ஆற்றில் வெளியேற்றப்படும் என்பதால் கரையோரங்களில் உள்ள 11 மாவட்டங்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**வாய்ஸ்**

**இதனிடையே ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து** அதிகரிக்க கூடும் என்பதால் சுற்றுலா பயணிகள் குளிக்க தடை விதித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சதீஸ் இன்று உத்தரவிட்டுள்ளார்.

**********

**மாயாறு வெள்ளபெருக்கு**

நீலகிரி மாவட்டம் கூடலூரை சுற்றியுள்ள பகுதிகளில் கடந்த 3 நாட்களாக பெய்த மழையால் மாயாற்றில் வெள்ள பெருக்கு ஏற்பட்டுள்ளதை அடுத்து இப்பகுதிகளில் வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**வாய்ஸ்**

**********

**விழிப்புணர்வு பேரணி**

கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவிலில் வன்கொடுமைக்கு எதிராக கல்லூரி மாணாக்கரின் விழிப்புணர்வு பேரணி இன்று நடைபெற்றது.

இதில் 200க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் பங்கேற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**வாய்ஸ்**

**********

**இருவரி**

**மதுரை மாவட்டத்தில் நடப்பு நிதியாண்டில் சிறு குறு** விவசாயிகளுக்கு 50 சதவிகித மானியத்தில் வேளாண் உபகரணங்கள் வழங்கப்பட உள்ளதாக ஆட்சித்தலைவர் திரு.பிரவீன் குமார் தெரிவித்துள்ளார்.

தகுதியுடையவர்கள் அருகில் உள்ள கால்நடை நிலையங்களை அணுகு பயன்பெறுமாறு கூறியுள்ளார்.

**அரியலூர் மாவட்டத்தில் ஆண்டிமடம் தா.பழூர்** தொழிற்பயிற்சி நிலையங்களில் மாணாக்கர் சேர்க்கை வரும் 31ஆம் தேதிவரை நீட்டிக்கப்பட்டுள்ளதாக ஆட்சித்தலைவர் திரு.ரத்தினசாமி தெரிவித்துள்ளார்.

**புதுக்கோட்டை மாவட்டத்தில் உங்களுடன்** ஸ்டாலின் திட்ட முகாம் 6 இடங்களில் நாளை நடைபெற உள்ளதாக ஆட்சித்தலைவர் திருமதி அருணா தெரிவித்துள்ளார்.

**********

**கோவில்**

நெல்லை அருள்மிகு ஸ்ரீஉச்சிஷ்ட கணபதி திருக்கோவில் விநாயகர் சதுர்த்தி விழா இன்று கொடியேற்றத்துடன் தொடங்கியது.

முக்கிய நிகழ்ச்சியான சதுர்த்தி விழா மற்றும் தீர்த்தவாரி வரும் 27ஆம் தேதி நடைபெறும்.

**********

**வானிலை**

நீலகிரி கோவை மாவட்ட மலைப்பகுதிகளில் ஓரிரு இடங்களில் இன்று கனமழைக்கு வாய்ப்பபிருப்பதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ள்து.

தமிழக கடலோரம், மன்னார் வளைகுடா, குமரிக்கடல் பகுதிகளில் பலத்த காற்று வீசக்கூடும் என்பதால் மீனவர்கள் இன்றும், நாளையும் இப்பகுதிகளுக்கு செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்படுகிறார்கள்.

**********

**மல்யுத்தம்**

பல்கேரியாவில் நடைபெறும் 20 வயதிற்குட்பட்டோருக்கான மல்யுத்த சேம்பியன்பட்ட போட்டியின் 97 கிலோ ஃபிரி ஸ்டைல் பிரிவில் வெண்கலப்பதக்கத்திற்கான போட்டியில் இந்தியாவின் விஷால் இன்று களமிறங்குகிறார்.

கஜகஸ்தான் வீரர் Samir Dursunov-வை விஷால் எதிர்கொள்கிறார்.

**********

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது**